**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.110/2010**

**தேதி : 25.07.2025**

**(பி.வா.சா.1) – திரு. ரவி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)**

1. என்னுடைய சொந்த ஊர் சோழவந்தான். நான் விவசாயம் செய்கிறேன். ரியல் எஸ்டேட் தொழிலும் செய்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளை சரியானவையா என்றால் சரியானவை. அதில் சொல்லியுள்ள விபரங்கள் நானாக தெரிவித்தவையா என்றால் ஆம். அதனை நான் எனக்காகத்தான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். மற்ற பிரதிவாதிகளுக்காக நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லையா என்றால் மற்ற பிரதிவாதிகளுக்காகவும்தான் தாக்கல் செய்துள்ளேன்.

2. மற்ற பிரதிவாதிகளுக்கும் எனக்கும் என்ன உறவுமுறை என்றால் சொத்தை நான் வாங்கிய வகையிலும், அவர்கள் எனக்கு விற்ற வகையிலும் உறவுமுறை ஆகும். மற்ற பிரதிவாதிகள் அவர்களுக்காகவும் சேர்த்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ய எனக்கு அனுமதி வழங்கியுள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். எனக்கு எழுத்துமூலமாக அனுமதியுள்ளதா என்றால் இல்லை. நான் கிரையம் பெறும்போது உயில் ஆவணத்தை என்னிடம் கொடுத்தார்கள். இன்று வரை வேறு மூல ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் நீதிமன்றத்திலிருந்து நகல் பெற்றது என்றால் சரிதான். அது அ.வ.எண்.506/2014 என்ற கூடுதல் சார்பு நீதிமன்ற வழக்கு கோப்பிலிருந்து மேற்படி ஆவணம் நகல் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.506/2014 என்ற வழக்கானது யார் யாருக்கிடையில் நடந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த வழக்கில்

நான் தரப்பினர் அல்ல. அந்த வழக்கு அக்பர் அலி என்பவர் இக்பால் என்பவர் மீதும், மாலதி என்பவர் மீதும் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் என் வசம் உள்ளது. அந்த அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்று கேட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

4. 2,3,4 பிரதிவாதிகளை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 2016 ஆம் ஆண்டு முதல் தெரியும். 2ம் பிரதிவாதியின் கணவர் சக்திவேலை எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி சக்திவேல் என்பவர் குடும்பத்தைப் பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் செய்த விபரம் எனக்கு தெரியாதா என்றால் கிரையம் வாங்கும்போது மேற்படி விபரம் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் அவர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களையும், அவர்கள் கிரையம் பெற்ற சொத்துக்களையும் சேர்த்து பாகப்பிரிவினை செய்துகொண்டுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அதில் ஏ செடியூல் சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட விபரம் மேற்படி ஆவணத்தைப் பார்த்துத்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் 'A' செடியூல் சொத்துக்கள் 1ம் பிரதிவாதி சக்திவேலுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் மதிப்பு ரூ.7,80,000/– என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். B அட்டவணை சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சகோதரர் பராசக்தி என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் மதிப்பு ரூ.87,50,000/– என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 'C' அட்டவணைச் சொத்து 1ம் பிரதிவாதியின் சகோதரிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் இன்னாரென்று நிரூபித்தவர் S.ஜெயராமன், த/பெ. சக்திவேல் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் உள்ள ஆவணம் தயாரித்தவர் என்ற இடத்தில் உள்ள ஜெயராமன் என்ற

கையொப்பமும், பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் உள்ள இன்னாரென்று நிரூபித்தவர் என்ற இடத்தில் உள்ள ஜெயராமன் என்ற கையொப்பமும் ஒன்றுபோல் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் சக்திவேல் என்ற கையொப்பம் மாறி மாறி உள்ளது. மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்து சக்திவேலின் கையொப்பம் என ஒப்புக்கொள்கிறேனா என்றால் ஆம். மேற்படி கையொப்பமானது பக்கத்துக்கு பக்கம் வித்தியாசமாக உள்ளது என்றால் இல்லை.

7. உயில் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி 2,3,4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்துள்ள உயில் ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம். வாதி, 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்த விபரமும், 1ம் பிரதிவாதி பதிலறிவிப்பு கொடுத்த விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அசல் உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேன். நான் சொல்லும் உயில் ஆவணமானது சக்திவேலால் எழுதப்படவில்லை என்றும், அது போலியானது என்றும் சொன்னால் சரியல்ல.

8. 1ம் பிரதிவாதி ரூ.2,77,000/-க்கு தாவாச்சொத்தை கிரையம் பேசி முன்பணமாக ரூ.1,00,000/- பெற்றுக்கொண்டு வாதிக்கு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார் என்றால் அது மோசடியானது. மேற்படி கிரைய ஒப்பந்தம் பற்றி நகல் பார்த்த பிறகுதான் எனக்கு தெரியும். தாவாச்சொத்து சக்திவேலின் சுயசம்பாத்திய சொத்து என்றும், வாதிக்கு கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றும், அதன் அடிப்படையில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல, கிரைய ஒப்பந்தம் மோசடியானது.

9. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 10.09.2006ம் தேதியில் வழக்குச் சொத்தும், மற்றும் இதர சொத்துக்களைப் பொறுத்து 2ம் பிரதிவாதியான எனக்கும், 3,4 பிரதிவாதிகளான எனது மக்களான பிரியங்கா, ஹர்ஷினி என்ற

கரிஷ்மா அவர்களுக்கும் உயில் சாசனம் எழுதிவைத்திருந்தார், இந்த நிலையில் கடந்த 07.06.2007 ம் தேதியன்று 1 ம் பிரதிவாதியான எனது கணவர் 2 ம் பிரதிவாதியான என்னையும், 3,4 பிரதிவாதிகளான அவரின் மக்களான பிரியங்கா, ஹர்ஷினி என்ற கரிஷ்மா ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்று நான் கூறியுள்ள விபரங்கள் சரியானவையா என்றால் சரியானவை அல்ல.

10. எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்த மாலதி என்பவரின் கணவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. 2007 ம் ஆண்டிலேயே வாதி வழக்குச் சொத்தை கிரையம் பெற வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் இந்த வழக்குச் சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 2 ம் பிரதிவாதியிடம் தாவாச் சொத்துக்கள் அல்லாமல் பல சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பாக வில்லங்கச் சான்று பெற்றுப் பார்த்தேன். அதில் நிறைய ஜப்தி உத்தரவுகள் இருந்தது என்றால் சரிதான்.

11. தாவாச்சொத்து அமைந்துள்ள இடம் கொடைக்கானல் ரோடு புளியமரத்துச் செட் என்றால் சரிதான். நான் 2 ம் பிரதிவாதி மாலதியிடம் மொத்தம் எத்தனை சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. அய்யம்புள்ளி கிராமத்தில் உள்ள சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளேன். வேறு சொத்துக்கள் எதனையும் கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். அய்யம்புள்ளி கிராம சொத்து பழனி சார்பதிவாளர் அலுவலகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தின் கிரைய ஆவணத்தை நான் ஒட்டன்சத்திரத்தில் பதிவு செய்துள்ளேன்.

12. நான் அய்யம்புள்ளி கிராமத்தில் உள்ள சொத்தை கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண்கள் எனக்கு ஞாபகமில்லை. நான் பெற்ற வில்லங்கச்சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அதில் தாவாச்சொத்தைப் பொறுத்து எவ்வித நீதிமன்ற ஜப்தியும் இல்லை என்றால் சரியல்ல, ஜப்தி உத்தரவு இருந்தது. அ.வ.எண்.506/2014 வழக்கில் நான்

சாட்சியமளிக்கவில்லை. அ.வ.எண்.506/2014 வழக்கின் ஆவணம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் ஞாபகமில்லை. சக்திவேல் வாதிக்கு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்ததன் அடிப்படையில் வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு 1ம் பிரதிவாதி இறந்தபிறகு அவரது வாரிசுகளான 2,3,4 பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்திலிருந்து பலமுறை அழைப்பாணைகள் அனுப்பப்பட்டும், அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

13. வழக்குச் சொத்தை நான் கிரையம் பெறும்போது இந்த வழக்கு பற்றிய தகவல் எதுவும் 2,3,4 பிரதிவாதிகள் என்னிடம் தெரிவிக்கவில்லை. நான் தாவாச்சொத்தை கிரையம் பெற்றதாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவாச்சொத்தை எனக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றும், நான் பெற்ற கிரையம் செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்த விபரம் எனக்கு தெரியும் என்றும், தெரிந்தே கிரையம் பெற்றுவிட்டு தற்போது அதனை மறைத்து பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல.

14. எனக்கு மொத்தம் எத்தனை ஏக்கர் விவசாய நிலம் உள்ளது என்றால் ஞாபகமில்லை. சிவகிரிப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் மாரியப்பன் எனக்கு உறவினர் என்றால் சரிதான். அவர்தான் மேற்படி சொத்தை எனக்கு வாங்கிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கு பழனியில் சுமார் 15 ஏக்கர் நிலம் இருக்கும். அதில் நான்தான் விவசாயம் செய்கிறேன். நான் விவசாயமே செய்யவில்லை என்றும், நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மாரியப்பன் அவருடைய பெயரில் சொத்துக்கள் வாங்க முடியாமல் என் பெயரில் சொத்துக்களை வாங்கியுள்ளதாகச் சொன்னால் சரியல்ல.

15. கடன் தொகைகள் குறித்து மாரியப்பன் பைசல் பேசியதாகச் சொன்னால் சரியல்ல. சக்திவேல் கையெழுத்து போடுவதை நான் நேரடியாக பார்த்தது கிடையாது. அதனால் அவரது கையொப்பம் இதுதான் என என்னால்

அறுதியாக கூற இயலாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கையில் உள்ள சக்திவேலின் கையொப்பமும், பி.வா.சா.ஆ.1 ல் உள்ள சக்திவேலின் கையொப்பமும் ஒன்றுபோல் உள்ளது என்றால் வா.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பம் வேறுபட்டு உள்ளது.

16. நான் தாவாச்சொத்தில் தென்னை விவசாயம் செய்துள்ளேன். அதற்கான அடங்கல் தாக்கல் செய்யவில்லை. தாவாச்சொத்தில் நான் எவ்விதமான விவசாயமும் செய்யவில்லை என்றும், அதனால்தான் அடங்கல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல, அடங்கல் ஆவணம் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வா.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பம் தொடர்பாக நான் நடவடிக்கை எடுக்க உள்ளேனா என்றால் நடவடிக்கை எடுக்க உள்ளேன். 1ம் பிரதிவாதியின் கையெழுத்தை நான் பார்த்ததே இல்லை என்ற நிலையில், அதை ஒப்பீடு செய்யவேண்டும் என்று நான் கோருவது வழக்கை தாமதம் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் என்று சொன்னால் சரியல்ல. 2,3,4 பிரதிவாதிகள் வாதிக்கு கிரையம் எழுதிக்கொடுக்க கடமைப்பட்டுள்ளவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

17. நான் வழக்கு நிலுவையில் இருந்தபோது கிரையம் பெற்றுள்ளதால் தாவாச்சொத்தைப் பொறுத்து எனக்கு எவ்விதமான உரிமை மாற்றமும் ஏற்படாது என்றால் சரியல்ல. என்னுடைய கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்தால் உண்மை விபரங்கள் தெரியவரும் என்றால் சரியல்ல. நான் சொத்தைப் பொறுத்தவரை 3ம் நபர்தான் என்றும், 2ம் பிரதிவாதிக்குத்தான் 1ம் பிரதிவாதியின் நடவடிக்கைகள் தெரியும் என்றும், அவரை விசாரித்தால்தான் உண்மை விபரங்கள் தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. வாதியை மோசடி செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 2ம் பிரதிவாதியை சாட்சியாக விசாரிக்காமல் நானும் மற்ற பிரதிவாதிகளும் கூட்டுச்சதி செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல.

18. 2ம் பிரதிவாதி தற்போது எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. 3,4 பிரதிவாதிகள் எங்கு இருக்கிறார்கள் என்பதும் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி இஸ்லாமியர் ஒருவரை திருமணம் செய்துகொண்டு வாழ்ந்து வருவதாகச் சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. சொத்தில் ஏதாவது வில்லங்கம் ஏற்பட்டால் அதை தீர்த்துக்கொடுக்கவேண்டியது 2 முதல் 4 பிரதிவாதிகளின் கடமை என்று சொன்னால் சரிதான். வாதிக்கு தாவாப்படி தீர்ப்பாகவேண்டியது என்றும், 2 முதல் 4 பிரதிவாதிகள் வாதிக்கு கிரையம் எழுதிக்கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் பழனி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யாமல் ஒட்டன்சத்திரத்தில் கிரைய ஆவணம் பதிவு செய்ததற்கு என்ன காரணம் என்றால் நான் கிரையம் பெற்ற சொத்துக்களில் ஒன்று ஒட்டன்சத்திரம் ஆளுகைக்கு கீழ் இருந்தது.

19. தாவாச்சொத்தைத் தவிர வேறு சொத்துக்களை கிரையம் பெறவில்லை என தெரிவித்துவிட்டு தற்போது முரண்பட்டு சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல, அதைச்சேர்ந்த சொத்து ஒட்டன்சத்திரத்தில் இருந்தது. பழனி சார்பதிவாளர் அலுவலகத்தில் சொத்துக்களை பதிவு செய்யமுடியாது என்பதால் என்னுடைய அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தகாத முறையில் பத்திரம் பதிவு செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சக்திவேல் 07.06.2007ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் உயிருடன் இருந்த காலத்தில் எழுதிவைத்த உயில் ஆவணம் அவர் இறந்த பிறகுதான் நடைமுறைக்கு வரும் என்றால் சரிதான்.

20. சக்திவேல் 05.01.2007 அன்று வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தத்தின்படி 2,3,4 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் எஸ்டேட் சொத்துக்களை அடைபவர்கள் என்ற முறையில் தாவாச்சொத்தை வாதிக்கு கிரையம் எழுதிக்கொடுக்க சட்டப்படி கடமைப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இறப்பதற்கு முன்பாக ஏற்படுத்திக்கொடுத்த ஒப்பந்தமும், அவர் செய்த காரியங்களும் அவரது வாரிசுகளான 2,3,4 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தும் என்று சொன்னால் சரியல்ல. தற்போது தாவாச்சொத்தின் மதிப்பு

கூடிவிட்டதால் தாவா கிரைய ஒப்பந்தப்படி ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

21. கிரைய ஒப்பந்தப்படி பாக்கிக் கிரையத்தொகையை வாதி செலுத்தி கிரையம் பெற தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. நான் பெயரளவிலான ஒரு உரிமையாளராக உள்ளேன் என்றும், நான் உண்மையான உரிமையாளர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 2,3,4 பிரதிவாதிகள் எனக்கு எழுதிக்கொடுத்துள்ள கிரையம் வாதியைக் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :–** இல்லை.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2025.07.25 18:05:09 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.